## வகுப்பு - 7 - பருவம் - 3 - வரலாறு
## 2 தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்

36. பின்வரும் கூற்றுகளில் வேறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.

கூற்று (A): மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களாக இராமநாதபுரம் பகுதியை ஆண்டுவந்த சேதுபதிகள் இராமேஸ்வரம் - இராமநாதசுவாமி கோவிலின் கட்டிடக் கலைக்கு பங்காற்றியுள்ளனர்.

கூற்று (B): இராமநாதசுவாமி கோவில் மூன்று பிரகாரச் சுற்றுகளைக் கொண்டுள்ளது.

கூற்று (C): வெளிப்பிரகாரத்தைத் தாங்கி நிற்கும் 1200க்கும் மேற்பட்ட தூண்கள் தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும்.

கூற்று (D): மதுரை கோவிலில் அமைந்துள்ள 1000 கால் மண்டபம் - மண்டபக் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

1. A 2. B 3. C 4. D

37. கூற்று காரணத்தை ஆய்வு செய்க.

கூற்று : கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய நினைவுச் சின்னங்கள் தென்னிந்தியாவில் இல்லை.

காரணம்: ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

1. கூற்று சரி, காரணம் தவறு.
2. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
3. கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
4. கூற்று காரணம் இரண்டும் தவறு.

38. தஞ்சை பெரிய கோவில் நந்தியின் சிலை ________ அளவு உடையதாகும்.

1. 16 அடி நீளம், 13 அடி உயரம் 2. 15 அடி நீளம், 16 அடி உயரம்
3. 13 அடி நீளம், 16 அடி உயரம் 4. 18 அடி நீளம், 15 அடி உயரம்

LIVEWORKSHEETS

39. தஞ்சை பெரிய கோவில் நந்தியின் சிலை ________ பாறைகளைக் கொண்டு செதுக்கப்பட்டதாகும்.

1. 7 2. 5 3. 1 4. 3

40. மகாபலிபுரத்திலுள்ள ஏழு கோவில்கள் என்றழைக்கப்படும் கோவிலில் எத்தனை கருவறைகள் உள்ளன?

1. 1 2. 2 3. 3 4. 4

41. மகாபலிபுரம் கோவில் ________ தெய்வங்களுக்கு படைத்தளிக்கப்பட்டது.

1. சிவன் - விஷ்ணு
2. கணபதி - பார்வதி
3. தட்சிணாமூர்த்தி - பிரம்மன்
4. சுப்ரமணியன் - சிவன்

42. கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டியவர் ________

1. இராஜராஜ சோழன்
2. விஜயாலய சோழன்
3. செம்பியன் மகாதேவி
4. இராஜேந்திர சோழன்

43. கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் உயரம் ________ ஆகும்.

1. 55 மீட்டர் 2. 100 மீட்டர் 3. 216 அடிகள் 4. 75 அடிகள்

44. சோழர்கள் வீழ்ச்சியடைந்து பாண்டியர்கள் எழுச்சி பெறும் வரை சுமார் ________ ஆண்டுகள் கங்கை கொண்ட சோழபுரமே சோழர்களின் தலைநகரமாகும்.

1. 100 2. 250 3. 150 4. 200

45. தாராசுரம் கோவிலின் ஒட்டுமொத்த வடிவம் ________ போலக் காட்சியளிக்கிறது.

1. தெப்பக்குளம் 2. மண்டபம் 3. தேர் 4. மாடக்குழி

46. பிள்ளையார்பட்டியிலுள்ள குடைவரைக் கோவில் ________க்காக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

1. தூண்கள், மண்டபம்
2. மாடக்குழிகள், கல்வெட்டுகள்

LIVEWORKSHEETS

3. சிற்பங்கள், கல்வெட்டுகள்
4. தெப்பக்குளம், சிற்பங்கள்

47. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு.

1. ஆயிரங்கால் மண்டபம்
2. புது மண்டபம்
3. திருக்குறுங்குடி
4. கங்கை கொண்ட சோழபுரம்

48. மாமல்லபுரத்தில் உள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?

1. 1964
2. 1994
3. 1974
4. 1984

49. முற்காலச் சோழர் கட்டடக் கலையின் சிறப்பு அம்சம் யாது?

1. புடைப்புச் சிற்பங்கள்
2. விமானங்கள்
3. பிராகாரங்கள்
4. கோபுரங்கள்

50. அழகிய நம்பி கோயில் எங்கு அமைந்துள்ளது?

1. திருக்குறுங்குடி
2. மதுரை
3. திருநெல்வேலி
4. ஸ்ரீவில்லிபுத்தூர்

51. வைகுண்ட பெருமாள் கோவிலை கட்டியவர் யார்?

1. மகேந்திரவர்மன்
2. நரசிம்மவர்மன்
3. ராஜசிம்மன்
4. இரண்டாம் நந்திவர்மன்

52. கீழ்க்கண்டவற்றை சரியாக பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. பல்லவர்காலம் | - | a) கி.பி. 1100 - 1350 |
| ii. முற்காலச் சோழர்கள் | - | b) கி.பி. 600 - 850 |
| iii. பிற்காலச் சோழர்கள் | - | c) கி.பி. 1600 க்குப் பின்னர் |
| iv. நவீன காலம் | - | d) கி.பி. 850 - 1100 |

1. i - b, ii - d, iii - a, iv - c
2. i - b, ii - d, iii - c, iv - a
3. i - b, ii - c, iii - d, iv - a
4. i - c, ii - d, iii - b, iv - a

LIVEWORKSHEETS

53. துவாரபாலகர்கள் என அழைக்கப்படுபவர் ______.

1. கடவுள்
2. அரசவை புலவர்
3. வாயிற்காப்போன்
4. பெண் கடவுள்

54. ராஜசிம்மன் என்ற இயற்பெயர் கொண்டவர் ______.

1. ராஜராஜ சோழன்
2. ராஜேந்திர சோழன்
3. மகேந்திரவர்மன்
4. இரண்டாம் நரசிம்மவர்மன்

55. கீழே உள்ளவற்றில் பல்லவ மன்னர் யார்?

1. இரண்டாம் நரசிம்மவர்மன்
2. ராஜேந்திரசோழன்
3. ராஜேந்திரவர்மன்
4. விஜயபாலன்

56. தமிழ் திராவிட கோயில் கட்டடக் கலைக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு ______.

1. பஞ்ச பாண்டவர் ரதம்
2. காஞ்சி - கைலாசநாதர் கோயில்
3. திருப்பரங்குன்றம் கோயில்
4. ஐராவதீஸ்வரர் கோயில்

57. பின்வருவனவற்றுள் எது பஞ்ச பாண்டவ ரதம்?

1. கருங்கல் பாறை
2. மாடக்குழி
3. அஜந்தா
4. பீம ரதம்

58. அர்ச்சுனன் தவம் இருக்கும் பாறையின் உயரம் ______.

1. 100 அடி
2. 43 அடி
3 45 அடி
4. 112 அடி

59. ஆண், பெண் தெய்வங்கள், அரசர்கள் ஆகியோரின் சிறப்புகளை எடுத்துரைப்பது?

1. பீம ரதம்
2. கருங்கல் பாறை
3. அர்ஜுனன் ரதம்
4. மாடக்குழி

60. பல்லவர்களின் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் ______.

1. பீமர்
2. முற்காலப் பாண்டியர்
3. பிற்காலப் பாண்டியர்
4. திராவிடர்கள்

61. பாண்டிய பேரரசின் குகைக் கோவில்களில் மிக முக்கியமானதாக கருதாதவை?

LIVEWORKSHEETS

1. மலையடிக்குறிச்சி
2. ஆனைமலை
3. தஞ்சாவூர்
4. திருப்பரங்குன்றம்

62. கருவறை வாயிலின் இருபுறத்திலும் _______ சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1. துவாரபாலகர்
2. விஷ்ணு
3. சிவன்
4. பிரம்மா

63. பாண்டியர் காலத்து சிவன் கோவில்களின் லிங்கங்கள் எந்த பாறையில் இருந்து செதுக்கப்பட்டதாகும்?

1. செங்கல்பாறை
2. படிகப்பாறை
3. பவளப்பாறை
4. தாய்ப்பாறை

64. கழுகுமலை கோவிலின் உச்சியில் உள்ள சிற்பம் எது?

1. நந்திவர்மன்
2. முருகன்
3. தட்சிணாமூர்த்தி
4. ஐராதீஸ்வரர்

65. பாண்டியர் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக திகழ்வது _______.

1. மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
2. தஞ்சை பெரிய கோயில்
3. ஐராவதீஸ்வரர் கோயில்
4. குடைவரை கோயில்

66. சித்தன்னவாசல் சமணத் துறவிகள் வாழ்ந்த இடம் _______.

1. புதர்
2. குகை
3. மண்டபம்
4. கோவில்

67. முற்காலச் சோழர்களின் கோவில் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டு _______.

1. தாதாபுரம் கோயில்
2. தஞ்சை பெரிய கோயில்
3. ஐராவதீஸ்வரர் கோயில்
4. தட்சிணாமூர்த்தி கோயில்

68. கோவில்களில் அதிக எண்ணிக்கையில் தேவகோஷ்டங்கள் இருந்தால் அதை _______ என்பர்.

1. பஞ்சவர்ணம்
2. சிற்பம்
3. செம்பியன் மகாதேவி பாணி
4. கலச கோபுரம்

LIVEWORKSHEETS

69. செம்பியன் மகாதேவியால் மறுவடிவாக்கம் செய்யப்பட்ட முற்காலக் கோவில்களுக்கு எடுத்துக்காட்டு ________.

1. திருப்புறம்பியம் கோயில்
2. தஞ்சை பெரிய கோவில்
3. தாதாபுரம் கோவில்
4. தட்சிணாமூர்த்தி கோவில்

70. கர்ப்பகிரகத்தின் மேலுள்ள கட்டுமானம் என்பது எது?

1. கடவுள் சிலை
2. வாயிற்படி
3) தூண்
4. விமானம்

LIVEWORKSHEETS